தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 10 திகதி: 29.11.2025

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்
திரு ஜனார்த்தன் குமரகுருபரன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	15	
வினா 2	25	
வினா 3	10	
வினா 4	15	
வினா 5	20	
வினா 6	15	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	2

கீழ்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

பூம்புகார் என்ற கடற்கரைப் பட்டினம் தமிழ்நாட்டில் இருக்கிறது. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழ நாட்டின் தலைநகராகவும் முதன்மைத் துறைமுகமாகவும் விளங்கியது. ஆதலால் பிற நாட்டு வணிகக் கப்பல்கள் இங்கு நிறைந்து நின்றதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. கல்லணை கட்டிய சோழ மன்னன் கரிகாலனின் ஆட்சி நகரமாகவும் பூம்புகார் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரக் கதை மாந்தர் கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோர் ஆவர். கோவலன், கண்ணகியின் பெற்றோர் பெரு வணிகர்கள். அவர்கள் இந்தத் துறைமுகப் பட்டினத்தில் தான் அரசருக்கு நிகரான செல்வச் செழிப்போடு வாழ்ந்தார்கள்.

தமிழ்நாட்டின் பெரிய நதியான காவேரி இவ்விடத்தில் தான் கடலில் கலக்கின்றது. அதனால் பூம்புகார் காவிரிப்பூம் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டது.

பூம்புகார் துறைமுகம் பின்னாளில் கடல்கோள்களால் அழிவுற்றது. அதனால் வணிக முதன்மையை இழந்தது ஆயினும் இன்றும் அழகான கடற்கரையாகத் திகழ்கிறது. இங்கே "ஏழடுக்கு மாளிகை" என்ற பெயரில் கண்ணகிக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இது சிறந்த சுற்றுலாத்தலமாக விளங்குகிறது.

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூம்புகார் எதனால் புகழ் பெற்றிருந்தது? (2 புள்ளிகள்)

_____

_____

_____

2. கல்லணையைக் கட்டிய மன்னன் யார்? (1 புள்ளி)

_____

3. சிலப்பதிகாரக் கதை மாந்தர் யாவர்? (3 புள்ளிகள்)

_____

_____

_____

4. கோவலன் கண்ணகியின் பெற்றோரின் சிறப்புகள் எவை? (2 புள்ளிகள்)

_____

_____

_____

5. பூம்புகாரின் வேறு பெயர் என்ன? அதற்கான காரணம் யாது? (2 புள்ளிகள்)

6. "ஏழடுக்கு மாளிகை" என்பது என்ன? அது எங்கே உள்ளது? (3 புள்ளிகள்)

7. பூம்புகார் எதனால் வணிக முதன்மையை இழந்தது? (2 புள்ளிகள்)

வினா இல	2	புள்ளிகள்	25	பக்கம்	4

கீழ் வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் அறிவியலும் தொழில்நுட்ப முன்னேற்றமும் பெருகி இணையம், கணனி, திறன்பேசிகளின் பயன்பாடு அதிகரித்து உள்ளது. முகநூல் (Facebook), புலனம் (Whatsapp), வலையொளி (Youtube), படவரி (Instagram) என்ற சமூக மின் ஊடகங்கள் செயற்கை நுண்ணறிவு, உலகமயமாதல் ஆகியவற்றால் தகவல்களின் பரவல் மிகவும் அதிகரித்துள்ளது. எந்த மூலையில் இருந்தும் ஒரு சில வினாடிகளுக்குள் செய்திகள் முழு உலகிலும் பரவுகின்றன. அத்துடன் ஒரே சமயத்தில் பல கோடி தகவல்கள் எம்மிடையே பரிமாற்றப்படுகின்றன.

முன்பு புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் வழியாகவே தகவல்களும் செய்திகளும் பரவின. ஆனால் இன்று தகவல்கள் இணையம், எண்மின் (DIGITAL) ஊடகங்கள் வாயிலாக சில நொடிகளில் கிடைக்கின்றன.

விரைவான தகவல் பரவல் பல நன்மையான விளைவுகளை எமக்குத் தருகின்றன. புதிய கண்டுபிடிப்புகளும் கல்வி மற்றும் முன்னேற்றங்களும் விரைவாகப் பரவுவதால் மனிதர்களின் அறிவு விரிவடைய வழி பிறந்துள்ளது. உலகின் எந்த மூலையில் உள்ளவர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் கருத்துப் பரிமாறவும் முடிகின்றது. இயங்கலை (online) வணிகமும் சேவைகளும் அதிகரித்துள்ளன. வாழ்க்கை இலகுவாகிறது. தகவல் பரிமாற்றத்தால் சுற்றுச்சூழல், சுகாதாரம், மனித உரிமைகள் போன்ற பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. மக்களின் கருத்துக்கள் உடனடியாக சமூகத்துக்கும் அரசாங்கத்துக்கும் சென்று சேர்கின்றன.

விரைவான தகவல் பரவலால் சாதகமான விளைவுகள் பல இருந்தபோதிலும் போலிச் செய்திகளும் வதந்திகளும் கூட விரைவாகப் பரவ வழி ஏற்படுகின்றது. தேவையற்ற தகவல்கள் அதிகமாகின்றன. அதிகமான தகவல் உபயோகிப்பு எமக்கு மன அழுத்தத்தையும் கவனச்சிதறல்களையும் உண்டாக்குகின்றன. இணையக் குற்றங்களும் மோசடிகளும் அதிகரித்துள்ளதையும் காணலாம்.

இன்றைய மாணவர்கள் இணையத்தை அதிக அளவில் பயன்படுத்தி உலக அளவில் கல்வி பெறுகின்றனர். கல்வித் தகவல்களை வழங்கும் வளங்களாக இவை விளங்குகின்றன. ஆனால் சமூக ஊடகங்களில் மாணவர்கள் அதிக நேரம் ஈடுபடுவதால் வீணான நேரச்செலவு உண்டாகிறது. கவனச்சிதறல்கள் ஏற்படுகிறது. தகவல்களை சரியாகத் தேர்ந்தெடுக்கும் திறன் மாணவர்களுக்குத் தேவையாகின்றது. இல்லையானால் தவறான பாதையில் செல்லவும் வழி பிறக்கும்.

இன்று தகவல்களின் வேகமான பரவல் தவிர்க்க முடியாததாகும். அதன் நல்ல பயன்களை நாம் பெறும் அதே வேளையில் பாதகமானவைகளை தவிர்த்து சமநிலை பேணவேண்டும். தகவல்கள் உண்மையானவையா என சரிபார்த்துப் பயன்படுத்த வேண்டும். தேவையற்றவைகளை தவிர்த்து பயனுள்ளவற்றை மட்டும் கையாளப் பழக வேண்டும். இளையோர் சரியான தகவல்களைத் தேர்ந்தெடுக்கும் திறனை வளர்த்துக் கொண்டால்தான் தகவல் பரவல் எமது சமூக வளர்ச்சிக்கு உதவுகின்ற கருவியாக மாறும்.

1. இன்று தகவல்கள் விரைவாகப் பரவுவதற்கான காரணம் என்ன? (3 புள்ளிகள்)

2. தகவல் பரவல் விரைவு இப்பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது? (2 புள்ளிகள்)

3. தகவல் பரிமாற்றத்தினால் சமூகம் அடைகின்ற சாதகமான அம்சங்கள் எவை? (5 புள்ளிகள்)

4. முன்னைய தகவல் தளங்களுக்கும் இன்றைய தகவல் தளங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? (3 புள்ளிகள்)

5. வேகமான தகவல் பரிமாற்றம் எத்தகைய பாதகமான விளைவுகளை உண்டாக்குகிறது? (4 புள்ளிகள்)

6. மாணவர்கள் எந்த வகையில் தகவல் பரவலால் நன்மை தீமைகளை அனுபவிக்க நேரிடுகிறது? (4 புள்ளிகள்)

7. இந்த உரைப்பகுதி மாணவர்களுக்கு தரும் அறிவுரை என்னவென்று உணர்ந்தீர்? உமது சொந்தக் கருத்தைத் தருக. (4 புள்ளிகள்)

வினா இல	3	புள்ளிகள்	10	பக்கம்	7

அழைப்பிதழ் எழுதுதல்

உமது தமிழ்ப் பாடசாலையில் வருடாந்தப் பரிசளிப்பு விழா 13/12/ 25 நடைபெற உள்ளது. நீர் மாணவர் சபைத் தலைவராக உள்ளீர். மாணவர் சபை சார்பாக பரிசளிப்பு விழாவிற்கான அழைப்பிதழை தயாரித்து எழுதுங்கள்.

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	9

மின்னஞ்சல் எழுதுதல்

அவுஸ்திரேலியாவில் தமிழ் பேசும் சமூகத்தினரின் வளர்ச்சி, முன்னேற்றம், அவர்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் குறிப்பிட்டு உமது நண்பருக்கு *பாலாமயூரன் @ ஜிமெயில்.கொம்* என்ற முகவரிக்கு மின்னஞ்சல் ஒன்று எழுதுக (125 சொற்கள்).

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	11

கட்டுரை ஆக்கம்

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிந்து 200 சொற்களில் எழுதுக

1. "அவுஸ்திரேலியாவில் தீபாவளிக் கொண்டாட்டம்" என்ற தலைப்பில் பத்திரிகையில் வெளியிடக் கட்டுரை ஒன்று எழுதுக.
2. உமது பிரதான பாடசாலையில் இருந்து கல்விச் சுற்றுலா மூன்று நாட்களுக்குச் சென்று உள்ளீர்கள். அச்சுற்றுலா மூலம் நீர் பெற்ற புதிய தகவல்கள், செய்முறை அனுபவங்கள், திறன்கள் பற்றி மூன்று நாட்களுக்கான தினக் குறிப்பேட்டுப் பதிவை எழுதுக.
3. அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் ஆகியவற்றை வளர்த்தெடுக்க கிடைத்துள்ள வாய்ப்புகளும், முயற்சிகளும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	15	பக்கம்	14

கேட்டுக் கிரகித்தல்

பனுவல்1

	இங்கே குறிப்பெடுக்கவும்
1. பண்டிதமணி கணபதி பிள்ளை எங்கு பிறந்தார்? (1 புள்ளி)	
2. இவர் கற்றறிந்தவை எவை? (2 புள்ளிகள்)	
3. இவர் எங்கு, என்ன பணி ஆற்றினார்? (2 புள்ளிகள்)	
4. "பண்டிதமணி" என்ற பட்டம் இவருக்கு ஏன் வழங்கப்பட்டது? (3 புள்ளிகள்)	
5. "இலக்கிய கலாநிதி" என்ற பட்டத்தை இவருக்கு யார் வழங்கினர்? (1 புள்ளி)	

பணுவல் 2

	இங்கே குறிப்பெடுக்கவும்
1. விளம்பரங்கள் எவ்வழிகளில் மக்களைச் சென்றடைகின்றன? (3 புள்ளிகள்) _____ _____ _____	
2. விளம்பரங்கள் சமூகத்திற்கு உதவுகின்றதா? காரணம் தருக? (3 புள்ளிகள்) _____ _____ _____ _____ _____ _____	